TNED140000422025

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, பவானி**
**முன்னிலை:-திரு.J.ராஜ்குமார், B.A., LL.B.,**
**நீதித்துறை நடுவர் எண்.1, பவானி**
**2026ம் வருடம் ஜூன் மாதம் 05ம் நாள் வியாழக்கிழமை**
**CMP.No.23/2025**

நடராஜ்(46)
த.பெ.சுப்ரமணியம்
க.எண். 44 – குலாலர் வீதி,
வெள்ளாளபாளையம் அஞ்சல்,
சக்தி நகர், அந்தியூர் வட்டம்,
ஈரோடு மாவட்டம். ..... புகார்தாரர் / மனுதாரர்

/எதிர்/

1.அ.கிட்டுசாமி (66)
த/பெ.அர்ஜீனன்,

2. பாலுசாமி
த/பெ.கிட்டுசாமி.

3. செல்வி (38)
த/பெ.கிட்டுசாமி.

4. கார்த்தி
த/பெ.வையாபுரி

உதவி ஆய்வாளர்,
ஆப்பக்கூடல் காவல் நிலையம்.
தற்போது
உதவி ஆய்வாளர்,
ஸ்பெஷல் பிரான்ஜ்
மாவட்ட காவல்
கண்காணிப்பாளர் அலுவலகம். ..... எதிர்மனுதார்கள்/எதிரிகள்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.05 18:41:43 +0530

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரரால் பிரிவு 175(3) BNSSன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவு 115, 296 (b), 324, 329, 351 உ/இ 3(5) BNS கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றும், 4ம் எதிரியானவர் சட்டப்படியான கடமைகளை செய்யாமல் எதிரிகளுக்கு சாதகமாக இருந்து கொண்டு சட்டத்திற்கு விரோதமாக நடந்து கொண்டதால் பிரிவு 223 மற்றும் 224 BNSன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நடவடிக்கை எடுக்க ஆப்பக்கூடல் காவல் ஆய்வாளருக்கு உத்தரவிடுமாறு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுவின் சுருக்கம்:

மனுதாரர் மேற்படி முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், 1ம் எதிரிக்கு ஆப்பகூடல் அத்தாணி மெயின் ரோட்டில் குடியிருப்பு அல்லாத வணிக கடைகள் கொண்ட சொத்தில் ஜவுளிக்கடை வைப்பதற்காக மனுதாரர் 1ம் எதிரியை அணுகி மாத வாட்கைக்கு பேசி மாதம் ஒன்றுக்கு ரூ.4,000/– என்றும், அதற்கு அட்வான்டி தொகை ரூ.40,000/– தர வேண்டும் என்ற 1ம் எதிரியின் வேண்டு கோளை ஏற்று கடந்த 20.09.2013 முதல் 1ம் எதரி கேட்ட அட்வான்ஸ் தொகையான ரூ.40,000/–த்தை ரொக்கமாக கொடுத்து (ராஜேஸ்வரி சில்க்ஸ் ஹவுஸ் மற்றும் ரெடிமேட்) என்ற பெயரில் கடை நடத்தி வந்தும், மேற்படி வாடகையானது கடந்த 20.09.2013 அன்று மனுதாரர், 1ம் எதிரியிடம் வாய்மொழியாக ஒப்பந்தம் பேசி முன் தொகையாக ரூ.40,000/– கொடுத்தேன். ஆனால் 1ம் எதிரி அதற்கு ரசீது ஏதும் தரவில்லை என்றும்,

1.2 மேலும் மனுதாரர் கடந்த 20.09.2013–ம் தேதி முதல் ஒவ்வொரு மாதமும் 20ம் தேதியிலிருந்து 25–ம் தேதிக்குள் மாத வாடகையான ரூ.4,000/–த்தை ரொக்கமாக எதிரியிடம் மனுதாரர் செலுத்தி வந்ததாகவும், 1ம் எதிரிக்கு ரசீது தரும் வழக்கம் இல்லை என்று கூறியதாகவும், மேற்படி மாத வாடகையைானது 2 வருடங்களுக்கு ஒரு முறை எதிரி கூடுதலாக ரூ.500 முதல் ரூ.700 வரை சேர்த்து தர வேண்டும் என மனுதாரரிடம் கூறியதன் அடிப்படையில் வாடகை உயர்த்தப்பட்டு தவறாமல் மனுதாரர் கடந்த 2013 முதல்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.05 18:41:46 +0530

2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை உயர்த்தப்பட்ட வாடகையின் படி வாடகையை செலுத்தி வந்ததாகவும், இறுதியாக உயர்த்தப்பட்ட வாடகை ரூ.10,600/−ஐ மனுதாரர் கடந்த 4 வருடங்களாக 1ம் எதிரியிடம் கொடுத்து வந்துள்ளார்.

1.3 கடந்த 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் கோவிட்−19 நாடு தழுவிய கதவடைப்பின் போதும் கூட மனுதாரர் ஒவ்வொரு மாதமும் மிகுந்த சிரமத்திற்கு உட்பட்ட நிலையிலும் கூட மாத வாடகையை 1ம் எதிரியிடம் தவறாமல் செலுத்தியதாகவும், 1ம் எதிரி தனது எல்லா கடையை நடத்துவோருக்கும் விதிவிலக்கு அளித்திருந்தும் மனுதாரருக்கு வேண்டுமென்றே விதிவிலக்கு ஏதும் தராமல் வாடகையை வசூலித்து வந்தும், மனுதாரர் தனது சில்க் ஹவுஸ் மற்றும் ரெடிமேட் சென்டரில் ரூ.15,00,000/−மதிப்பிலான ஜவுளி மற்றும் இரண்டு தையல் மெசின், ஒரு ஓவர்லாக் மெஷின் மற்றும் ஜவுளிக்கடைக்கு தேவையான மரத்தினால் அமைக்கப்பட்ட அலமாரிகள், இரும்பு ரேக்குகள் சொந்த செலவுகளில் செய்தும், மேலும் மனுதாரரும், அவரது மனைவியும் இணைந்து மேற்படி ஜவுளித்தொழிலை மக்கள் மத்தியிலும், அக்கம் பக்கம் உள்ள கிராம மக்கள் மத்தியிலும் நற்பெயரோடு ஜவுளித்தொழில் செய்து வந்தார்கள்.

1.4 மேலும் மனுதாரரது இரண்டு பெண்கள் கல்லூரியிலும், பள்ளியிலும் படித்து வரும் காரணங்களினால் திடீரென்று தனியார் கல்லூரியிலும், தனியார் பள்ளியிலும் கல்வி கட்டணமும் மற்ற இதர செலவுகளும் செய்த காரணத்தினால் 2023ம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான மாத வாடகை செலுத்த இயலவில்லை இருந்தும் மனுதாரர் அதனையும் 1ம் எதிரியிடம் நேரடியாக சென்று கூறி இரண்டு மாத வாடகையும் சேர்த்து 2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ம் தேதி தருவதாக நான் உறுதியளித்தும், அதனையும் 1ம் எதிரி ஏற்றுக் கொண்டார்.

1.5 ஆனால் கடந்த 23.12.2023ம் தேதி அன்று மாலை சுமார் 5 மணியளவில் 1ம் எதிரியும், அவரது மகன் 2ம் எதிரி மற்றும் மகள் 3ம் எதிரி ஆகிய மூவரும் எவ்வித முன் அறிவிப்பும்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.05 18:41:49 +0530

இல்லாமல் மனுதாரரும், அவரது மனைவி ராஜேஸ்வரியும் கடையில் தையல் மெசினில் துணி தைத்து கொண்டிருந்தபோது அத்துமீறி நுழைந்து தகாத வார்த்தைகளால் பேசி கடையை சாத்து என்று கூறி ரூ.12,000/- மதிப்புள்ள 2 தையல் மெசின்களையும் பலாத்காரமாக கீழே போட்டு உடைத்து சேதப்படுத்தினார்கள் என்றும், மனுதாரர், கடந்த "10 வருடமாக எவ்விதமான பாக்கியுமின்றி வாடகை கொடுத்து வந்திருந்தும், 2 மாத கால அவகாசம் கேட்க அதற்கு 1 முதல் 3 எதிரிகள் சட்டவிரோதமாக அத்துமீறி நுழைந்து தகாத வார்த்தைகளை பேசி மெசின்களை போட்டு உடைத்தும், அதுமட்டுமின்றி 1ம் எதிரி பக்கத்தில் இருந்த ஸ்டுலை எடுத்தும். கத்திரிக்கோலை எடுத்து மனுதாரரின் மனைவியை குத்தி கொலை செய்துவிடுவேன் என மிரட்டியும் மற்றும் ஒரு பெரிய கல்லை தூக்கி வந்து அடிக்க வந்தும், மனுதாரரை 1, 2 எதிரிகள் பின் கழுத்தில் அடித்து கழுத்தை பிடித்து வெளியே தள்ளியதாகவும், மேலும், மேலும் கடை சாவியை மனுதாரரிடம் இருந்து பலவந்தமாக பிடுங்கி கொண்டு ஜவுளி கடைக்கு செலுத்தி வரும் ஐ.டி மற்றும் ஆர்.சி என்ற ஆவணங்கள் இருந்தும் கடையினை சேதப்படுத்தி ரூ.15,00,000/-ம் அளவிற்கு நஷ்டம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்து துரத்தி விட்டனர்.

1.6 இது குறித்து மனுதாரர் கடந்த 24.12.2023-ம் தேதியன்று ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் எழுத்துப்பூர்வமாக புகார் கொடுத்ததாகவும், 4ம் எதிரியான ஆப்பக்கூடல் காவல் உதவி ஆய்வாளர் நேரில் வந்து விசாரித்த பிறகும் 1 முதல் 3 எதிரிகள் மீது இது வரை எந்த விதமான சட்டப்படியான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், ஏனென்றால் 1ம் எதிரி அரசியல் மற்றும் பணபலம் மிக்கவர் என்பதால் எவ்விதமான சட்டப்படியான நடவடிக்கைகளையும் எதிரிகள் மீது எடுக்கவிடாமல் செய்துள்ளார் என்றும், மனுதாரர், எதிரிகள் மீது புகார் கொடுத்த பிறகு மனுதாரரின் கடைக்கு கடந்த 26.12.2023ம் தேதி காலை 6 மணிக்கு வந்து பார்த்த போது பூட்டப்பட்ட கடை திறக்கப்பட்டுள்ளதை பார்த்து பெரும் அதிர்ச்சிக்குள்ளாகினார்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.05 18:41:52 +0530

1.7 எனவே மனுதாரர் 1 முதல் 3 எதிரிகள் மீது ஆப்பக்கூடல் காவல்நிலையத்தில் கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரின் மீது எந்த வித நடவடிக்கையும் எடுக்காததால் கடந்த 27.12.2023 அன்று மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் ஒரு புகார் மனு கொடுக்கப்பட்டு அந்த மனுவின் மீது விசாரணைக்காக மேற்கண்ட 4ம் எதிரி அலைபேசியில் அழைத்து மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளிடம் அளித்து புகார் சம்பந்தமாக விசாரணை செய்ய அழைத்தனர் என்றும், ஆனால் அங்கு எவ்வித விசாரணையும் இன்றி 1ம் எதிரிக்கு ஆதரவாக மட்டுமே அனைத்து விசாரணையும் செய்யப்பட்டது. மேலும் மனுதாரரிடம் மேற்கண்ட புகார் சம்பந்தமாக சமரசம் செய்து கொள்ளுமாறு 4ம் எதிரி கூற அதனை மறுத்தும் வேண்டுமென்றே மிரட்டி அந்த சமரசத்தில் கையொப்பமிட வைத்ததாகவும், இது குறித்து மனுதாரர் கடந்த 27.12.2023 அன்று மேற்கண்ட புகார் சம்பந்தமாகவும், அதன் பேரில் எனக்கு ஏற்பட்டுள்ள இழப்பீடு குறித்தும் 1ம் எதிரிக்கும், 4ம் எதிரிக்கும் வழக்குரைஞர் சட்டபதிவு அறிவிப்பு அனுப்பி அதனை 1, 4 எதிரியும் பெற்றுள்ளதாகவும், மேலும் மனுதாரர் கடையை இனிமேலும் தொடர்ந்து நடத்த முடியாத அளவிற்கு 1 முதல் 3 எதிரிகள் மனுதாரரது சொத்துக்கு ரூ.15,00,000/– அளவிற்கு சேதம் ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், மனுதாரர் கடந்த 10 ஆண்டு காலமாக மக்கள் மத்தியிலும் அக்கம், பக்கம் உள்ள கிராம மக்கள் மத்தியிலும் பெற்றிருந்த நற்மதிப்பிற்கும் கலங்கம் ஏற்படுத்திவிட்டார்கள் என்றும், இது குறித்து பஞ்சாயத்து பேசுவதற்கு எதிரிகள் ஏற்பாடு செய்து அதன் பேரில் முன்னாள் அமைச்சர் N.K.பெரியசாமி மகன் சத்தியன் அவர்கள் பேசியும் எதிரிகள் ஒத்துக் கொள்ள மறுத்துவிட்டதால் எதிரிகள் திட்டமிட்டே அவர்கள் செய்த செயலை மறைக்க பஞ்சாயத்து பேச ஒப்புக்கொண்டு தற்போது மறுத்துவிட்டனர்.

1.8 1, 3 எதிரியான அப்பக்கடல் காவல் உதவி ஆய்வாளர் துணையோடு தான் இத்தகைய சட்டவிரோத செயலை 1 முதல் 3 எதிரிகள் சட்டத்திற்குபுறம்பாக அத்துமீறி நுழைந்து ரூ.15,00,000/–மதிப்பிலான பொருட்களையும் துணிமணிகளையும் தையல் மிஷினையும் உடைத்து மனுதாரருக்கும் அவரது மனைவிக்கும் கொலை மிரட்டல் விடுத்துள்ளதாகவும்,

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.05 18:41:54 +0530

எனவே 1 முதல் 3 எதிரிகள் மீது பி.என்.எஸ். சட்டம் 2003 பிரிவு 115, 296 (b), 324, 329, 351 உ/இ 3(5) ஆகியவற்றில் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றும், 4ம் எதிரியானவர் சட்டப்படியான கடமைகளை செய்யாமல் எதிரிகளுக்கு சாதகமாக இருந்து கொண்டு சட்டத்திற்கு விரோதமாக நடந்து கொண்டதால் BNS சட்டம், 2023 பிரிவு 223 மற்றும் 224–ன் படி தண்டிக்கப்படவேண்டிய குற்றம் புரிந்தவர்கள் என்கிற அடிப்படையில், முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க ஆப்பக்கூடல் காவல் நிலையத்தின் பொறுப்பு அதிகாரியான பவானி வட்ட காவல் ஆய்வாளருக்கு புலன் விசாரணை செய்ய உத்தரவிட்டும் 175(3) BNSSன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்கண்ட மனுவின் மீது இந்நீதிமன்றத்தால் முதல் விசாரணை (Preliminary enquiry) செய்ய ஆப்பக்கூடல் காவல் ஆய்வாளருக்கு உத்தரவிட்டு, அந்த உத்தரவின் பேரில் காவல் துறையினர் விசாரணை மேற்கொண்ட அறிக்கையில், விசாரணை சுருக்கம்:

3. மனுதாரர் நடராஜன் எதிர்மனுதாரர் கிட்டுசாமி அவர்களின் கடையை ரூ.40,000/– அட்வான்ஸ் மற்றும் மாத வாடகை ரூ.4000/– வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ரூ.500/– முதல் ரூ.700/–வரை உயர்த்தியும் நடைமுறை படுத்திக்கொள்வதாக எந்த ஒரு டாக்குமென்ட்டும் இல்லாமல் வாய்மொழியாக பேசி 20.09.2013 முதல் ஸ்ரீ ராஜேஸ்வரி என்ற பெயரில் ஜவுளிக்கடை மற்றும் தையல் தொழில் செய்து வந்துள்ளார். இந்நிலையில், கடந்த 20.9.2013ம் தேதி முதல் ஸ்ரீ ராஜேஸ்வரி என்ற ஜவுளிக்கடை மற்றும் தையல் தொழில் செய்து வந்துள்ளார். இந்நிலையில், கடந்த 2023 ஆம் வருடம் கொரோனா காலம் வரை நன்றாக தொழில் செய்து வந்துள்ளார். எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கைமாற்று தொகையாக ரூ.1,00,000/– மட்டும் எந்த டாக்குமெண்ட்டும் இல்லாமல் வாய்மொழியாக கொடுத்துள்ளார். அதற்கு உண்டான வட்டியாக ரூ 54,000 சேர்த்து ரூ.1,54,000/– மற்றும் 2013 நவம்பர், டிசம்பர் மாத வாடகை பாக்கி ஆகியவை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரர் நடராஜனுக்கு ஏல சீட்டு மற்றும் தொழில் கடன் ஆகியவை ஏற்பட்டு கடன் சுமை சம்பந்தமாக பலர் வந்து கடையில் வாய் தகராறு செய்துள்ளனர். எனவே எதிர்மனுதாரர்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.05 18:41:58 +0530

கிட்டுசாமி தனது கடையை காலி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ள மனுதாரர் காலி செய்து கொள்ள ஒப்புக்கொண்டு தனது அட்வான்ஸ் தொகையினை கழித்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டு தனது கடையில் உள்ள பொருட்களை சிறிது சிறிதாக எடுத்துக் கொண்டு சென்றுள்ளார். இந்நிலையில், எதிர்மனுதாரர் 23.12.2023ம் தேதி மாலை சுமார் 5 மணியளவில் எதிர்மனுதாரர்கள் தனக்கு உண்டான தொகையை தராமல் காலி செய்து கொண்டுள்ளதை அறிந்து கேட்க சென்றபோது இருதரப்பினருக்கும் வாய்தகராறு ஏற்பட்டு ஆப்பக்கூடல் காவல் நிலையம் வந்து திரு. கார்த்திக் உதவி ஆய்வாளரிடம் இருதரப்பு புகார் கொடுக்கப்பட்டு மனுதாரரின் புகாரில் உண்மை தன்மை இல்லை என்பதால் எதிர்மனுதாரருக்கு மனு ரசீது எண் 142/2023 கொடுத்து விசாரணை செய்ததில் இருதரப்பினருக்கும் சமரசம் ஏற்படவில்லை என்பதால் இம்மனு மீதான விசாரணை முடித்து வைக்கப்பட்டு இரு தரப்பும் நீதிமன்றம் சென்று நிவாரணம் தேடிக்கொள்ள அறிவுரை திரு.கார்த்திக், உதவி ஆய்வாளர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் கடையின் சாவியை எதிர்மனுதாரிடம் கொடுத்துவிட்டு நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளலாம் என சொல்லி சென்றுள்ளார். மனுதாரர் நீதிமன்றத்தின் புகாரில் திரு.கார்த்திக் உதவி ஆய்வாளரையும் சேர்த்து புகார் செய்து மனுதாரரின் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளார். அதே நாளில் மனுதாரர் ஆப்பக்கூடல் திரு.N.K.K.சத்தியன் அவர்களிடம் பஞ்சாயத்து பேசிக் கொடுக்கும்படி கேட்டு பஞ்சாயத்து முடிவில் ரூ 50,000 கொடுத்து தனது பொருட்களை எடுத்துக் கொள்வதாக பேசி முடித்துள்ளனர். மேலும் மனுதாரர் சேதப்படுத்தியதாக சொல்லும் பொருட்களில் ஒரு தையல் மிஷின் ஒரு ஓவர்லாக் மிஷின் மற்றும் சில பொருட்களும் மனுதாரர் அவராகவே கடையில் பின்னால் உள்ள அறையில் வைத்துள்ளார் என்பதால் மனுதாரர் நடராஜன் கொடுத்த புகாரில் சொன்ன சம்பவங்கள் என்பது பொய்யான சங்கதிகள் ஆக உள்ளது என்பதை ஆப்பக்கூட சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராஜேந்திரகுமார் ஆகிய என்னால் கணம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 பவானி அவர்கள் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.05 18:41:59 +0530

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மேற்படி புகார் மற்றும் மனுதாரரின் மனுவை பரிசினை செய்கையில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு BNSS, 2023 பிரிவு 175(3)ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் மனுவில், எதிர்மனுதாரர்கள் 1 முதல் 3 வரை சட்டவிரோதமாக கடைக்குள் அத்துமீறி நுழைந்து, தையல் இயந்திரங்கள் மற்றும் ஜவுளிப் பொருட்களை சேதப்படுத்தி, மனுதாரருக்கும் அவரது மனைவிக்கும் தகாத வார்த்தைகளால் பேசியும், தாக்க முயற்சித்ததாகவும் மற்றும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அதுகுறித்து அளிக்கப்பட்ட புகாரின் மீது காவல்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட்டு, இருதரப்பினருக்கும் ஏற்பட்டது வாடகை மற்றும் பணப்பரிவர்த்தனை தொடர்பான தகராறு என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், மனுதாரர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள், குறிப்பாக அத்துமீறி நுழைதல், சொத்து சேதப்படுத்தல், தாக்குதல் மற்றும் மிரட்டல் தொடர்பான குற்றச்சாட்டுகள், முதற்கட்டமாகவே நிராகரிக்கத்தக்கவை அல்ல. மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளின்படி, மனுவில் கூறப்பட்டுள்ள தகவல்கள் ஒரு (Cognizable) குற்றத்தை வெளிப்படுத்தும் பட்சத்தில், அதன் உண்மைத் தன்மையை இந்நிலையிலேயே ஆராய்வது நீதிமன்றத்தின் கடமையல்ல. அவ்வாறான உண்மைத் தன்மையை புலன் விசாரணையின் மூலம் காவல்துறையினரே கண்டறிய வேண்டும். மேலும், மனுதாரரின் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள், பாரதிய நியாய சன்ஹிதா, 2023–ன் தொடர்புடைய குற்றப் பிரிவுகளின் கீழ் விசாரணைக்குரிய (Cognizable) குற்றங்களாக இந்நீதிமன்றத்திர்க்கு தோன்றுகின்றன. எனவே, இந்த மனு மீது முழுமையான விசாரணை அவசியமாகிறது. மேற்படி பரீசிலனைகளின் அடிப்படையில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

ஆப்பக்கூடல் காவல் நிலையத்தின் பொறுப்பு அதிகாரி/காவல் ஆய்வாளர், மனுதாரரின் புகாரின் அடிப்படையில் உரிய முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்து,

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.05 18:42:06 +0530

சட்டப்படி புலன் விசாரணை மேற்கொண்டு, அதன் இறுதி அறிக்கையை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு உத்தரவிடப்படுகிறது.

முடிவு :–

எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது மேற்கண்ட காரணங்களுக்காக அனுமதிக்கப்பட்டு இந்நீதிமன்றத்தினால் உத்தரவிடப்படுகிறது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.05 18:42:03 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1**
**பவானி.**

நகல்
காவல் ஆய்வாளர்,
ஆப்பக்கூடல் காவல் நிலையம்,
ஆப்பக்கூடல்.